# வரலாற்றில் தஞ்சை

ஆசிரியர்

**கு. தாமோதரன்**, எம்.ஏ.,

பதிவு அலுவலர், சென்னை.

வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

சென்னை-600 028

*1984*

முதற் பதிப்பு - 1984
த. நா. தொ. பொ. ஆ. துறை
வெளியீடு எண். 98

© தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

# வரலாற்றில் தஞ்சை

ஆசிரியர்
கு. தாமோதரன்

விலை ரூ.

அச்சிட்டோர்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
மந்தைவெளி, சென்னை - 600 028

# முன்னுரை

தஞ்சையின் வரலாறு மிகவும் தொன்மை வாய்ந்த ஒன்றாகும். இதன் சிறப்பைப் பாமர மக்களும் அறிந்து கொள்ளும் வகையில் எளிய நடையில் கூறவேண்டும் என்ற எண்ணத்தின் வெளிப்பாடே இந்தச் சிறு நூல். இந்நூல் எழுதும்போது அவ்வப்பொழுது எழுந்த ஐயங்களை மூத்த இளவரசர் உயர்திரு. இராஜாராம் ராஜா அவர்கள் தீர்த்து வைத்தார்கள். மேலும் அரண்மனை பற்றிய அரிய செய்தி களையும் அளித்து என்னை ஊக்குவித்துள்ளார்கள். அவர் களுக்கு என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறு நூலாக இருந்தாலும் இதனை நமது துறையில் வெளியிடுவதற்கு இசைவளித்து அறிவுரையும் அவ்வப்பொழுது வழங்கி ஊக்கமளித்த திரு. நடன. காசிநாதன் எம்.ஏ. இயக்குநர் பொறுப்பு அவர்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் சிறப்பான முறையில் வெளிவர துணை புரிந்த திரு. அ. இராசேந்திரன், திருமதி நா. மார்க்சீயகாந்தி ஆகியோருக்கும், அச்சுப் பிரிவில் பணிபுரியும் திருவாளர்கள் திரு. வீ. சிவபாலன், திரு. மு. சம்பத் மற்றும் அச்சுப் பிரிவின ருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்,

**கு. தாமோதரன்**

# பதிப்புரை

தமிழகத்தின் நெற்களஞ்சியமாகத் திகழும் தஞ்சை மாவட்டம் சோழர்கள் காலத்தில் கலைக் களஞ்சியமாகவும் திகழ்ந்திருக்கிறது. அதிலும் குறிப்பாகத் தஞ்சை மாநகர் பல்லாற்றாலும் சிறந்து விளங்கியிருக்கிறது. அத்தகைய சிறப்புப் பொருந்திய தஞ்சை மாநகரின் வரலாற்றைக் கி.பி. 7-ஆம் நூற்றாண்டு தொடங்கி தஞ்சை மராட்டியர் காலம் முடிய இந்நூலாசிரியர் எழுதியுள்ளார். பாமர மக்கள் எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையில் வரலாற்றில் முக்கிய நிகழ்ச்சிகளை மட்டும் எடுத்துக் கூறியுள்ளார்.

சங்க காலத்தில் உறையூரும் பூம்புகாரும் சோழ நாட்டில் எவ்வாறு விளங்கினவோ அதுபோன்று பிற்காலச் சோழர் ஆட்சியில் தஞ்சாவூரும், பழையாறையும் சிறப்புப் பொருந்திய தலைநகரங்களாகத் திகழ்ந்திருக்கின்றன. முத்தரையர்களிடமிருந்து சோழன் விசயாலயனால் வெல்லப்பட்ட தஞ்சை மாநகரை மிகச் சிறப்பானதொரு நகரமாக அவன் அமைத்து அங்கு நிசும்பசூதனிக்கும் ஒரு கோயில் எடுப்பித்தான் என்று செப்பேடு புலப்படுத்துகிறது. அது முதல் தொடர்ந்து மன்னர் ஆட்சிகளிலும் சரி மக்கள் ஆட்சியிலும் சரி தன்புகழ் குன்றாமல் விளங்கும் தஞ்சை மாநகரைப்பற்றி இச்சிறு நூல் மூலம் இவ்வாசிரியர் விளக்குகிறார். இந்நூல் இத்துறையின் தொண்ணூற்றெட்டாவது வெளியீடாக வெளிவருகிறது. விரைவில் நூறாவது வெளியீட்டைக் கொண்டுவர முயற்சி எடுக்கப் பட்டு வருகிறது.

பதிவு அலுவலர் திரு. கு. தாமோதரன் அவர்களின் முயற்சிக்கு எம் பாராட்டு.

அன்பன்,

சென்னை-28

10-9-84

**நடன. காசிநாதன்**

இயக்குநர் (பொறுப்பு)

# வரலாற்றில் தஞ்சை

வான் பொய்ப்பினும் தான் பொய்யாக்காவிரி பாயும்சோழ நாடு, வளங்கருதி 'சோழநாடு சோறுடைத்து' என்று போற்றப் படுகிறது. சோழநாடு, நிலவளமட்டுமல்லாமல் கலை வளமும் பெற்றுத் திகழ்கிறது. இதில் தஞ்சாவூர் தலைமையிடத்தைப் பெற்று விளங்குகிறது. தஞ்சாவூர் என்பது 'தண்செய்' என்ற சொல்லின் மருவிய வடிவம் என்பர். தண்செய் என்பதற்கு குளிர்ந்த அழகிய சோலைகளும், வளம் தரும் வயல்களும் சூழ்ந்த ஊர் என்பது பொருள். தஞ்சாவூர், 'தஞ்சாபுரி' என்றும் அழைக்கப்பெற்றது. பிரும்மாண்ட புராணத்தில் அயோத்தி, காஞ்சிபுரி இவற்றுக்கு இணையாக தஞ்சையும் புகழ்ந்து பேசப்படுகிறது. இவ்வூர், குபேரபுரி, விஜயபுரி, அழகாபுரி என்று பல பெயர் களைப் பெற்று விளங்கியிருக்கிறது.

## புராண வரலாற்றில் தஞ்சை

தஞ்சாவூரின் பெயர்க் காரணத்தை வடமொழியில் உள்ள 'வராகமான்மியம்' என்னும் நூல் விரிவாகப் பேசுகிறது. சமீவன சேத்திரத்தில் தஞ்சாசுரன் என்னும் அசுரன் தான் பெற்ற வரத்தால் எல்லோரையும் துன்புறுத்தி வந்தான். தஞ்சாசுரனைக் கொல்ல சமீவன சேத்திரத்தில் கோயில் கொண்டுள்ள ஆனந்தவல்லி, சக்திஉருவம் எடுத்துத் தஞ்சாசுரனுடன் கடும்போர் புரிந்து, முடிவில் அசுரனைக் கொன்றாள். தஞ்சாசுரன், தன் உயிர் பிரியும் நிலையில் சக்தியை வணங்கி 'தங்கள் கையால் என் உயிர் பிரிகிறது; அதனால் நான் மோட்சத்திற்குச் செல்கிறேன்.

நான் வாழ்ந்த இப்பகுதி என் பெயரிலேயே விளங்க வேண்டும்' என்று கேட்டுக் கொண்டான். அசுரனின் வேண்டுகோளுக்கு இணங்க அவ்வாறே தேவி வரம் கொடுத்தாள். அன்று முதல் இப்பகுதி 'தஞ்சாசுரன் பெயரால் தஞ்சாபுரி' என்று வழங்க லாயிற்று என்று இப்புராணம் கூறுகிறது.

## வரலாற்றில் தஞ்சை

தமிழ்நாட்டில் உள்ள பெரிய நகரங்களுள் தஞ்சாவூரும் ஒன்று. இதன் வரலாறு மிகவும் தொன்மைவாய்ந்ததாகும். ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பரடிகள் தம் திருவீழி மிழலைத் திருத்தாண்டகத்தில் 'தஞ்சைத் தளிக்குளத்தார்' என்று குறிக்கின்றார். சேத்திரக் கோவைத் திருத்தாண்டகத் தில் 'தஞ்சை' எனவும் கூறிச் சிறப்பித்திருத்தலால், இந்நகர் கி.பி. 7-ஆம் நூற்றண்டிலேயே சிறந்து விளங்கியிருக்கிறது.

திருச்சிராப்பள்ளி உச்சி பிள்ளையார் கோயில் மலையின் பின் புறத்தில் இயற்கைக் குகைத்தளம் ஒன்றுள்ளது. இதில் கி.பி. 6, 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த எழுத்துக்களில் 'தஞ்ச ஹரக' என்று குறிக்கப் பெற்றுள்ளது. தஞ்சையைக் கைப் பற்றியவன் என்பது இதன் பொருள். பல்லவ மன்னன் சிம்ம விட்ணுவோ அல்லது அவன் மகன் மகேந்திரவர்மனோ காவிரி வரையுள்ள நிலப்பகுதியைக் கைப்பற்றியபோது தஞ்சாவூரையும் கைப்பற்றியிருக்க வேண்டும். இது வரை கிடைத்துள்ள கல்வெட்டுகளில் தஞ்சையைக் குறிக்கும் மிகவும் தொன்மையான கல்வெட்டு இதுவே! கி.பி. 7-ஆம் நூற்றாண்டை ஒட்டியே தஞ்சை சிறப்பைப் பெற்றிருந்தது என்பதற்கு இது ஒரு சிறந்த சான்றாகும். இதற்கு முன்பு தஞ்சையைப் பற்றிய வரலாற்றுச் செய்தி ஒன்றும் நமக்குத் தெளிவாகக் கிடைக்கவில்லை. தஞ்சாவூரை முத்தரையர், சோழர், நாயக்கர், மராட்டியர் முதலிய மன்னர்கள் ஆண்டனர் என்பதை வரலாறுக் கூறுகிறது.

## முத்தரையர்

கி.பி. 7-ஆம் நூற்றாண்டிலிருந்து 9-ஆம் நூற்றாண்டு வரை முத்தரையர்கள் தஞ்சையை ஆண்டனர். இவர்கள் செந்தலை, வல்லம், நியமம் ஆகிய பகுதிகளைத் தலைநகராகக் கொண்டிருந்தனரென்பதைச் செந்தலைக் கல்வெட்டு குறிக்கிறது. இவர்கள் முதலில் பாண்டியர்களுக்கும் பிறகு பல்லவர்களுக்கும் திறை செலுத்திக் கொண்டு வாழ்ந்த குறுநில மன்னர்களாவர். எட்டாம் நூற்றாண்டில் ஆட்சி செய்த பெரும்பிடுகு முத்தரையனான சுவரன்மாறன் என்பவனைத் 'தஞ்சைக்கோன்' எனவும், 'தஞ்சை நற்புகழாளன்' எனவும் செந்தலைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. கி. பி. 8-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வைணவ சமயப் பெரியாராகிய திருமங்கையாழ்வார் தம் தஞ்சைப் பாசுரத்தில் 'வம்புலாஞ் சோலை மாமதின் தஞ்சை' என்று குறிக்கின்றார். அக்காலத்தில் இந்நகர் சிறந்த மதில் அரண் உடையதாக இருந்தது என்பது இதனால் தெரிகிறது.

கட்டிடக் கலைக்கு முத்தரையர்கள் அரும்பணியாற்றி உள்ளனர். இவர்கள் காலத்தில் கோட்டைகள் அமைக்கப் பெற்று அதில் அரண்மனையினையும் கட்டி வாழ்ந்தனர். அரண்மனையினைச் சுதை உருவங்கள் அழகு செய்தன. தஞ்சைக் கலைக் கூடத்தில் உள்ள, தாமரை மலர் ஏந்திய பெண் சிற்பமும், இதே இடத்தில் உள்ள பூதலூருக்கு அருகில் உள்ள பொன்விளைந்தான் பட்டியிலிருந்து, கொண்டு வரப் பெற்றுள்ள வீணாதரர் செப்புத் திருமேனியும் முத்தரையர் கலைப் பாணிக்கு எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன. தஞ்சை வடபத்திரகாளி கோயிலுக்கு வெளியில் உள்ள 'கௌமாரி' சிற்பமும் முத்தரையர் காலத்தைச் சார்ந்ததாகும். தஞ்சைப் பெருவுடையார் கோயில், தென்புறத் திருச்சுற்றில் உள்ள 'வராகி' சிற்பமும் முத்தரையர் காலத்தைச்

சார்ந்தவையாக இருக்கக் கூடும் என்று சில வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

## சோழர்கள்

முத்தரையர்களிடமிருந்து தஞ்சாவூரை விசயாலய சோழன் கி. பி. 846-இல் கைப்பற்றினான் என்பது முதலாம் இராசேந்திரனின் திருவாலங்காட்டுச் செப்பேட்டிலும், வீரராசேந்திரனின் கன்யாகுமரிக் கல்வெட்டுக்களிலும் குறிக்கப்படுகிறது. தென்னார்க்காடு மாவட்டம், திருக்கோயிலூருக்கு அருகில் உள்ள வீரசோழபுரத்திலிருந்து கிடைத்துள்ள கல்வெட்டு, விசயாலய சோழனைத் 'தஞ்சை கொண்ட கோப்பரகேசரி வர்மர்' என்று குறிக்கிறது.

விசயாலயன் போரில் வெற்றி பெற்றதற்கு அடையாளமாகத் தஞ்சையில் நிசும்பசூதனிக்கு ஒரு கோயில் எடுத்து வழிபட்டான். இதைத் திருவாலங்காட்டுச் செப்பேடு குறிக்கின்றது. இக்கோயில் தற்பொழுது தஞ்சையின் வெள்ளைப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் வடபத்ரகாளி கோயில் என்ற பெயரில் வழங்குகிறது. இக்கோயில் அண்மைக் காலத்தில் கட்டப்பெற்றிருந்தாலும், அதில் உள்ள "நிசும்பசூதனி" சிற்பம் விசயாலயன் காலத்தைச் சார்ந்தது.

விசயாலயனின் பேரனும் ஆதித்த சோழன் புதல்வனுமாகிய முதல் பராந்தக சோழனது ஆட்சிக் காலத்தில்தான் தஞ்சையின் வடபால் ஓடும் "வடவாறு" வெட்டப்பெற்றது. இது 'வீரசோழ வடவாறு' என இவ்வேந்தனது சிறப்புப் பெயரைக்கொண்டு விளங்கிற்று என்பதைக் கல்வெட்டுகளால் அறியலாம். கருவூர்த்தேவர் தஞ்சை இராசராசேச்சுவரமுடையார் மீது பாடியுள்ள திருவிசைப்பாப் பதிகத்தில்,

'மறிதிரை வடவாற் றிருபுனல் மதகில் வாழ்முதலை ஏற்றநீர்க் கிடங்கு' என்று இவ்வாற்றைச் சிறப்பித்துள்ளார். முதற் பராந்தக சோழனுடைய புதல்வராகிய கண்டராதித்த சோழன், தில்லையம்பலவாணர்மீது பாடியுள்ள திருவிசைப்பாப் பதிகத் தின் இறுதிப் பாடலாகிய திருக்கடைக்காப்பில் தம்மை 'தஞ்சை யர்கோன் கலந்த ஆராவின் சொற்கண்ட ராதித்தன்' என்று குறித்துக் கொள்கிறார்.

முதலாம் இராசராசன் ஆட்சிக்காலம், தமிழக வரலாற்றில் ஒரு பொற்காலம். இவன் காலத்தில் தஞ்சை மாநகரம் பல் வகைச் சிறப்புகளைப்பெற்றுத் திகழ்ந்தது. எல்லா வகையிலும் இவன் ஒரு மாமன்னனாகக் காட்சியளிக்கிறான். சிவபாத சேகரனான இராசராசன் இராசராசேச்சுரருக்கு 'தக்கணமேரு' என்று உலகமே போற்றுகின்ற வகையில் தஞ்சைப் பெரிய கோயிலை எடுப்பித்து மகிழ்ந்தான். இது திராவிட கலைப் பாணிக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குவதோடு தமிழகக் கோயிற் கட்டடக் கலைக்கு ஒரு சிகரமாகவும் விளங்கு கிறது. இராசராசன் ஆட்சிக் காலத்தில் கட்டடக்கலை, சிற்பக் கலை, படிமக்கலை, இசைக்கலை, நடனக்கலை, நாடகக்கலை, ஓவியக்கலை ஆகிய கலைகள் சிறந்து விளங்கின. சைவ, வைணவ சமயங்கள் போற்றப் பெற்றன. பிற சமயங்களான சமண, பௌத்த சமயங்களும் தழைத்தோங்கின.

## சோழர் கால அரண்மனை

சோழ மாமன்னர்கள், தாங்கள் வாழ்வதற்கு ஏற்ற வகை யில் அரண்மனைகளையும், அவைகளுக்குப் பாதுகாப்பாகக் கோட்டைகளையும் கட்டியுள்ளனர். தஞ்சையில் சோழர் கால அரண்மனைப்பகுதிகள் எங்கேயிருந்தன என்பதை ஆராய்கின்ற வகையில், தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறையும்,

தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகமும் அகழ்வாய்வினை மேற்கொண்டுள்ளது.

## குறும்பன் மேடு அகழ்வாய்வு

தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறை தஞ்சைப் பெருவுடையார் கோயிலுக்கு மேற்கே குறும்பின் மேடு என்ற இடத்தில் அகழ்வாய்வினை மேற்கொண்டது. அதில் சோழர் காலத்தைச் சேர்ந்த தட்டை ஓடுகளும், பானை ஓடுகளும் சுடு மண் பொருள்களும், செங்கற்களும் கிடைத்துள்ளன. மேலும் ஆய்வினை மேற் கொண்டால் அரண்மனைப் பகுதிகள் இருந்ததற்கான தடையங்கள் கிடைக்க வாய்ப்புண்டு.

## வல்லம் அகழ்வாய்வு

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சையை அடுத்த வல்லத்தில் அகழ்வாய்வினை மேற்கொண்டு வரலாற்றுக்கு முற்பட்ட காலச் சான்றுகளையும், சோழர் கால தட்டை ஓடுகளையும், பானை ஓடுகளையும் பிற்காலக் கட்டிடப் பகுதிகளையும் கண்டு பிடித்துள்ளது.

தஞ்சையில் தற்பொழுதுள்ள 'அரண்மனை சோழர்கள்' காலத்தைச் சார்ந்ததல்ல. இது நாயக்கர், மராட்டிய மன்னர்களால் கட்டப்பட்டது. இவர்கள் தங்களுக்கென்று தனிக் கோயில்களை அதிக அளவில் எடுக்காவிட்டாலும், முன்னரே எடுக்கப் பெற்ற கோயில்களுக்குப் பல திருப்பணிகள் செய்துள்ளனர். சிறு சிறு சன்னதிகளையும் மண்டபங்களையும் கட்டியுள்ளனர்.

## பாண்டியர் காலம்

சுந்தர பாண்டியன் கி.பி. 1219-இல் சோழ நாட்டின் மேல் படையெடுத்துச் சென்று மூன்றாம் இராசராசனைப் போரில்

வென்று அந்நாட்டைக் கைப்பற்றினான். இப்படையெடுப்பில் சோழரின் பழைய தலைநகராகிய உறையூரும், தஞ்சாவூரும் பாண்டிய நாட்டுப் போர் வீரர்களால் கொளுத்தப்பட்டது. மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும் ஆடலரங்குகளும், மணிமண்டபங்களும் இடிக்கப்பட்டு, நீர் நிலைகளும் அழிக்கப் பட்டன. முற்காலத்தில் சோழன் கரிகாற்பெருவளத்தான் என்பவன் தன் மீது பட்டினப்பாலை பாடிய கடியலூர் உருத் திரங் கண்ணனார் என்ற புலவருக்குப் பரிசிலாக வழங்கியிருந்த பதினாறுகால் மண்டபம் மட்டும் சோழநாட்டில் இடிக்கப் படாமல் விடப்பட்டதென்றும், பிற எல்லாம் அழிக்கப்பட்டு விட்டன என்றும் திருவெள்ளறையில் பொறிக்கப்பட்டுள்ள சுந்தரபாண்டியன் கல்வெட்டுக் குறிக்கிறது.

## நாயக்கர் காலக்கோட்டை

விசயநகர மன்னனான அச்சுதராயரிடமிருந்து தஞ்சாவூரைச் சீதனமாக செவப்ப நாய்க்கன் பெற்றான். தஞ்சாவூர் சிவகங்கை பூங்காவை உள்ளடக்கிய கோட்டையைக் கட்டியவன் இவனே! இந்த கோட்டை 'சிறிய கோட்டை' என்று அழைக்கப் படுகிறது. இது தஞ்சைப் பெரிய கோட்டையின் தென்மேற்கு மூலையில் சதுர அமைப்பில் அமைந்திருக்கிறது. இங்கு ஒரு குளம் உள்ளது. இது 'செவப்ப நாயக்கன் குளம்' என்று வழங்குகிறது. குளத்தின் மேற்குப் பகுதியிலுள்ள ஏரியும் செவப்ப நாயக்கனால் எடுக்கப்பட்டது. இதனைச் 'சேப்பனா வாரி' என்று மக்கள் இன்றும் அழைக்கின்றனர். இந்த ஏரியில் இருந்து தான் குளத்திற்குத் தண்ணீர் செல்கிறது. இதற்கு மதகு உள்ளது. ஏரியின் மேற்குப் பக்கத்தில் உள்ள மண்டபமும் நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டதாகும். இதனைக் 'கழுவேற்று மண்டபம்' என்று மக்கள் இன்றும் அழைக்கின்றனர்.

தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர்களில் குறிப்பிடத் தகுந்தவன் இரகுநாத நாயக்கன் ஆவான். கும்பகோணத்தில் உள்ள இராமசாமி கோயிலைக் கட்டியவன் இவனே. இவனுடைய மகன் விசயராகவ நாயக்கன் தன்னுடைய தந்தையின் பெயரில் 'இரகுநாத நாயக்க அப்யுதயமு' என்ற நூலை எழுதி உள்ளான். இதில் இரகுநாதனைப் பற்றியும், அவனுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த மன்னர்களைப் பற்றியும் காணலாம். இந்நூல், தஞ்சை அரண்மனையைப் பற்றிய முழு விவரத்தினை மிகவும் அழகாகக் குறிக்கிறது.

விசயராகவ நாயக்கன் தஞ்சைப் பெரியகோட்டையைச் சீர் படுத்தினான் என்று கூறப்படுகிறது. அறந்தாங்கி, பட்டுக் கோட்டை, கீழாநிலை, திருப்பத்தூர் ஆகிய ஊர்களிலும் கோட்டைகளைக் கட்டியுள்ளான். மன்னார்குடியில் உள்ள இராச கோபால சுவாமி கோயிலைப் புதுப்பித்தவன் இவனே. மயிலாடு துறையில் காவிரிக் கரையில் கோபுரத்துடன் கூடிய சதுரவடிவமான புஷ்ய மண்டபத்தை அமைத்தான். இதே ஊரில் வீரசோழன் ஆற்றுக்குத் தென்கரையில் ஒரு மண்டபத்தைக் கட்டியுள்ளான்.

மதுரை நாயக்க மன்னனான சொக்கநாத நாயக்கனின் படையெடுப்பால் தஞ்சையில் நாயக்கர் ஆட்சி சீர்குலைந்தது. சொக்கநாத நாயக்கன் வல்லம், தஞ்சாவூர் ஆகிய இடங்களில் அமைந்திருந்த கோட்டைகளை எவ்வாறு கைப்பற்றினான் என்பதை "வல்லத்துக் கோட்டை வடநோக்கி போகையில் தஞ்சாவூர்க் கோட்டை தானாய் கவுலலாச்சே" என்ற வரிகள் நினைவூட்டுகின்றன.

## மராட்டியர் காலம்

நாயக்க மன்னர்களுக்குப் பிறகு மராட்டிய மன்னர்கள் ஆட்சிக்கு வந்தனர். ஏகோஜி என்னும் வெங்கோஜி மன்னனே

தஞ்சை மராட்டியர் ஆட்சிக்கு வித்திட்டவனாவான். இவனுக்குப் பின்னர் வந்த இரண்டாம் சகாசி தஞ்சை அரண்மனையில் உள்ள மராட்டியர் தர்பார் மண்டபத்தை அமைத்தான்.

இதை முன்னரே இருந்த நாயக்கர் காலத்துக் கட்டடப் பகுதிகளுடன் இணைத்து அமைத்துள்ளான். முதல் சரபோசி, துக்கோசி இரண்டாம் ஏகோசி, பிரதாப சிம்மன், துளசாசி ஆகிய மன்னர்களும் தஞ்சையை ஆண்டனர்.

இரண்டாம் சரபோசியின் ஆட்சிக் காலம் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். தஞ்சை அரண்மனையில் அமைந்துள்ள சரசுவதி மகால் நூல் நிலையத்தை விரிவுபடுத்தியவன் இவனே. அரண்மனையில் உள்ள எழு அடுக்கு மாளிகையினைக் கட்டி உள்ளான். பட்டுக்கோட்டைக்கு அருகிலுள்ள சரபேந்திர ராசன் பட்டினத்தில் 'மனோரா' என்ற உப்பரிகையினைக் கட்டியவனும் இவனே.

தஞ்சை மராட்டிய மன்னனான சிவாசியின் ஆட்சியும் சிறப்புவாய்ந்த ஒன்றாகும். இவன் பல கட்டிடப் பகுதிகளைக் கட்டியுள்ளான். தஞ்சாவூரில் இருந்து திருவையாறு செல்லும் நெடுஞ்சாலையில் வெண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி, காவிரி ஆகிய ஆறுகளின்மீது 71 ஆயிரம் ரூபாய் செலவில் பாலங்களைக் கட்டியுள்ளான். இதைக் காவிரிப் பாலத்தில் பொறிக்கப்பட்டுள்ள சிவாசியின் கல்வெட்டுக் குறிக்கிறது. தஞ்சை அரண்மனையில் உள்ள மராட்டியர் தர்பார் மண்டபத்தில் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ள உருவம் இவனுடையதே.

இவனுக்குப் பின்னர் சரபோசி ராசா. சிவாசி ராசா ஆகிய மன்னர்கள் தஞ்சையை ஆண்டுள்ளனர். தஞ்சை மராட்டிய மன்னர்களின் வரிசையில் இராசாராம் ராசாசாகிப் அவ

களும், அவருடைய இளவல் துளசேந்திர ராசாவும் கடைசி அரசர்களாக விளங்குகிறார்கள்.

**தஞ்சை மராட்டியர்கள் கோட்டை**

தஞ்சாவூருக்குக் 'கருடன் கோட்டை' என்ற ஒரு பெயரும் உண்டு. இவ்வூர் ஒரு கருடப்பறவை வடிவிலமைந்திருந்ததே இதற்குக் காரணமாகும். வீடுகள், அரண்மனைகள், கோயில் களைக் கருடன் தன்னுடைய சிறகுகளின்மீது தாங்கியிருப் பது போன்று அமைந்திருந்ததாம். தஞ்சாவூரைச் சுற்றிக் கோட்டை அமைந்திருந்தது. கோட்டைக்குள் பாம்பு கடித்து ஒருவரும் இறந்தது இல்லை என்று கூறப்படுகிறது. அப்படி இறக்க நேரிட்டாலும் கோட்டைக்கு வெளியே சென்று தான் இறப்பார்களாம். கோட்டையைச் சுற்றி அகழி அமைந் திருந்தது. கோட்டைச் சுவர் மிகவும் உயரமாக அமைந்திருந்த தால் இது 'சைனாபால்', (சுவர்) என்று அழைக்கப்பெற்றது. இது 'பிரகாரி' என்றும் வழங்கப்பட்டது. கோட்டையின் நான்கு பக்கங்களிலும் வீரர்கள் காத்து நிற்பதற்கு மேடை அமைக்கப் பட்டு இருந்தது. கோட்டைச்சுவர் மிகவும் அகலமாக அமைந் திருந்தது. இதன்மீது ராணுவ வீரர்கள் அணி வகுத்து செல்லும் அளவிற்கு அமைக்கப்பட்டு இருந்தது. இதனுடைய ஒரு பகுதி யினை இன்றும் காணலாம். கோட்டையின் நான்கு பக்கங்களி லும் வாயில்கள் அமைந்திருந்தன. கிழக்குப் பகுதியில் இருந்த மூலவாயில், வெற்றிவாயில் என்று அழைக்கப் பெற்றது. இது 'சர்ச்சா வாசல்' என்றும் தெற்கு வாயில், 'கோனே வாகினி' என்றும் குறிக்கப் பெற்றது. மேற்குப் பக்கத்திலும் வாயில் அமைந்திருக்கிறது. கோட்டையின் ஒவ்வொரு வாயி லையும் தனித்தனியே காவல் தெய்வங்கள் காத்து நின்றன. கிழக்குப் பக்க வாயிலை விநாயகரும், வடக்குப் பக்க வாயிலை முருகனும் காத்து நின்றனர் என்று கூறப்படுகிறது.

## தஞ்சை அரண்மனைப் பகுதிகள்

தஞ்சை அரண்மனையில் அரசவை, அரசர்கள் அதிகாரிகள் வாழ்ந்த இடங்கள், அந்தப்புரம், ஆயுத கோபுரம், கந்தக கோபுரம், மணி மண்டபம், நாயக்கர் தர்பார் மண்டபம், சரசுவதி மகால், நூல் நிலையம், சங்கீத மண்டபம், ஏழு அடுக்கு மாளிகை, மராட்டிய தர்பார் மண்டபம், குதிரை, யானை லாயங்கள், கதை உருவங்களுடன் கூடிய இருட்டறைப் பகுதிகள் மற்றும் பல கட்டிடப் பகுதிகள் காணப்படுகின்றன.

## நாயக்கர் கால அரண்மனைப் பகுதிகள்

அரண்மனையினுள் செல்வதற்கு தெற்குப் பக்கத்தில் ஒரு வாயில் உள்ளது. இந்த வாயில் இப்பொழுது மூடப் பட்டுள்ளது. வாயிலில் காவலர்கள் பிரம்புத் தடிகளை ஏந்தி நின்றனர். இவர்கள் 'குறி கொல்லாஸ் (இடையர்கள்) என்று அழைக்கப் பெற்றனர் என்று குறிக்கப்படுகிறது. அரண்மனை யில் முதலில் அமைந்திருந்த பகுதி 'இலக்குமி விலாசம்'. இங்கு ராணுவத் தலைவர்களும் தளபதிகளும், படைகளை வரிசையாக நிறுத்தி வைப்பார்களாம். அடுத்து 'அச்சுத ரங்க கூடத்தை' அடையலாம். இராணுவ வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கும் இடம் இது. இந்தக் கூடம் புன்னை மர நிழலில் அமைந்திருந்ததாம். கூடத்தினுள்ளே சிங்க உருவங்கள் வைக்கப்பெற்று இருந்தன வாம். அழகு வாய்ந்த நாகபுரி விலாசம் என்ற மாளிகையும் அரண்மனையில் இருந்ததாம். உடற்பயிற்சிக் கூடம் ஒன்று இருந்ததாகக் குறிப்புகள் காணப்படுகின்றன. இது 'லாகுலசப் பரா' என்று அழைக்கப்பட்டது. இதன் அருகில் நாடக சாலை இருந்தது. 'மதன கோபால விலாசம்' என்ற பகுதியில் இறைவன் மன்னாருடைய சிலை இருந்ததாகக் கூறப்படுகிறது.

## நாயக்கர் தர்பார் மண்டபம்

தஞ்சைக் கலைக் கூடத்தின் உள்ளே நுழைந்தவுடன் நம் கண்ணையும், கருத்தையும் கவருவது பிரம்மாவின் சிலை. இந்தப்பகுதியினைத் தாண்டி உள்ளே சென்றால் திறந்தவெளி முற்றத்தைக் காணலாம். இதற்கு மேற்புறம் இரண்டு கருங்கல் யானைகள் நுழை வாயிலின் இரண்டு பக்கங்களிலும் நிற்கின்றன. உள்ளே நுழைந்தால் நாயக்கர் தர்பார் மண்டபத்தை அடையலாம். இது விசயரகுநாத நாயக்கனால் கட்டப்பட்டது. இது "சீ இராமசௌதம்" என்று அழைக்கப்படுகிறது. இதனை இராமன் மாளிகை என்றும் கூறுவர். புட்பக விமானத்தைப் போன்று இது விளங்கியதாம். இந்த மண்டபத்தின் தரை பொன் நீலநிற சலவைக் கல்லால் அமைக்கப்பட்டு இருந்ததாம். இதில் பொன் வேலைப்பாடு மிகுந்த அரியணையில் பட்டாபிசேக உருவம் பிரதிபலித்ததாம். தர்பார் மண்டபத்தின் மேற்குச் சுவரில் சுதையினால் செய்யப்பெற்றுள்ள உருவமே அது. இராமபிரான் அமர்ந்த நிலையிலும் இடது பக்கம் சீதாதேவி அமர்ந்தும், தேவியின் அருகில் அனுமான் உருவம் கம்பீரமாக கைகளைக் கூப்பிய நிலையில் வருபவர்களை வரவேற்பதாக அமைந்துள்ளது. இதற்குப் பக்கத்தில் ஆங்கிலேயர் காலத்தைச் சார்ந்த ஓவியங்கள் தீட்டப்பெற்றுள்ளன. மண்டபத்தின் மத்திய பகுதியில் படிகளுடன் கூடிய ஒரு மேடை காணப்படுகிறது. இதன் மீது நீண்ட சதுரக் கருங்கல் போடப்பட்டுள்ளது. இது மிகவும் பெரிய அளவில் அமைந்துள்ள ஒரே கல்லாகும். இது படுவைக்கல் என்று அழைக்கப்படுகிறது. இந்த கல்லின் மீது சலவைக்கல்லால் செய்யப்பெற்ற சிலை ஒன்று உள்ளது. இது மராட்டிய மன்னன் இரண்டாம் சரபோசியின் சிலையாகும். இது பிற்காலத்தில் இங்கு கொண்டுவந்து வைக்கப்பெற்றுள்ளது. இந்த மண்டபத்தைத் தற்பொழுது செப்புத்திருமேனிகள் அழகு செய்கின்றன. தஞ்சை மாவட்டத்

தில் உள்ள பல்வேறு ஊர்களில் உள்ள கோயில்களில் இருந்து எடுத்துவரப்பெற்ற பல்வகையான செப்புத் திருமேனிகள் காட்சியளிக்கின்றன. நடராசர், சிவகாமி, சோமாஸ்கந்தர், திரிபுராந்தக மூர்த்திகள், விநாயகர், விட்ணுதிருமேனிகள் முதலியன அழகு வாய்ந்தவை. குறிப்பாகத் திருவெண்காட்டிலிருந்து கொண்டுவந்து வைக்கப்பெற்றுள்ள ஏறாரும் பெருமான், பிட்சாடானர், முருகன், வள்ளி, தெய்வயானை, கண்ணப்பர் ஆகிய திருமேனிகள் பார்ப்பவர் உள்ளத்தைப் பரவசமூட்டுபவை.

## விசயபவனம்

இப்பெயரில் ஒரு மாளிகையும் இருந்ததாகக் கூறப்படுகிறது. மாளிகையின் கதவுகள் தங்கத்தால் செய்யப்பெற்று இருந்ததாம். இப்பொழுது இந்தப் பகுதி எங்குள்ளது என்பது தெரியவில்லை. இதனை அடுத்து 'இந்திரா மந்திரம்' என்ற மாளிகை இருந்ததாம். இது இரகுநாதநாயக்கனால் கட்டப்பட்டதாகும். இதில் பலவகை வண்ண ஓவியங்கள் தீட்டப்பெற்று இருந்ததாம். இது 'விசயராகவ விலாசம்' என்று அழைக்கப் பெற்றது. இவனுடைய செப்புத்திருமேனி கலைக்கூடத்தில் தற்பொழுது வைக்கப்பட்டுள்ளது. தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ள நந்தி மண்டபத்தின் தூணில் இவனுடைய உருவம் செதுக்கப்பெற்றுள்ளது.

## வழிபாட்டு மண்டபம்

அரண்மனை நாயக்கர் தர்பார் மண்டபத்தின் வடக்குப் பக்கம் உள்ள மண்டபத்தின் மேற்பகுதியில் உள்ள மண்டபமே 'வழிபாட்டு மண்டபம்' என்று அழைக்கப்படுகிறது. இங்கு மன்னர்கள் தினமும் பூசை செய்வார்களாம். இதன் எதிரில் கோயில் விமானம் போன்ற ஒரு அமைப்பு காணப்படுகிறது. இது ஆயுத கோபுரம் என்று அழைக்கப்படுகிறது.

## ஆயுத கோபுரம்

இங்கே ராணுவ தளவாடங்கள் வைக்கப் பெற்று இருந்த தாம். தற்பொழுது இவை சென்னை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. 'ஒன்பது அடுக்குகளைக் கொண்ட இக் கட்டடப் பகுதி கோபுரம் போன்று காட்சியளிப்பதால் கோபுரம் என்ற சிறப்புப் பெயருடன் விளங்குகிறது. இதன்மீது செல்வதற்குப் படிகள் அமைக்கப்பட்டுள்ளன. தஞ்சைப் பெரிய கோயில் விமானத்தைப் போன்று இது காட்சி யளிக்கிறது. நாயக்க மன்னர்கள் பெரிய கோயில் விமானத்தின் அழகினைக் கண்டு மயங்கி, தாங்களும் அதே போன்று அமைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் அமைத்திருக்கக் கூடும். விமானம் கீழே சதுரமாகவும் மேலே போகப் போக கூம்பு போன்றும் செல்கிறது. இதன் மீது எண்பட்டை சிகரம் அழகு செய்கிறது. சிகரத்தின் மீது செப்பு கலசம் காட்சி யளிக்கிறது. ஆயுத கோபுரத்தின் வெளிப் பகுதியில் நான்கு பக்கங்களிலும் சுதை உருவங்கள் அழகு செய்கின்றன. கஜலெட்சுமி சாமரம் ஏந்திய பெண் உருவங்களும், யானையின் மீது மன்னர்கள் செல்லுகின்ற காட்சியும், வீரர்கள் குதிரையின் மீது செல்வதையும் நாரதர், தும்புரு உருவங்களும், பல்வகைப் பூக்களும் ஆயுத கோபுரத்தை அணி செய்கின்றன. நாயக்க மன்னர்கள் சிறந்த விட்ணு பக்தர்கள் என்பதற்கு எடுத்துக் காட்டாக சங்கு சக்கரத்தை சுதையில் அமைத்துள்ளனர். தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறை இக்கோபுரத் தைப் பாதுகாத்து வருகிறது.

## மணி மண்டபம்

கலைக் கூடத்தின் நுழை வாயிலின் மேற்குப் பக்கத்தில் இம் மண்டபம் அமைந்துள்ளது. இது 'மாட மாளிகை' என்றும் 'தொள்ளைக்காது மண்டபம்' என்றும் மக்களால் அழைக்கப்

படுகிறது. இது ஏழு அடுக்குகளைக் கொண்டதாய் உள்ளது. இதன் மேற்பகுதிக்குச் செல்வதற்கு மாளிகையின் உள் பகுதியில் படிகள் உள்ளன. இதன் மேற்பகுதி சதுரமாக உள்ளது. இதன் மேலிருந்த கட்டடப் பகுதி விழுந்து விட்டதாகக் கூறப்படுகிறது. இதன் மீது பெரிய மணி ஒன்று இருந்ததாகவும் கூறப்படுகிறது. இதன் காரணத்தால் தான் இது 'மணி மண்டபம்' என்று அழைக்கப்பட்டது. செஞ்சி நாயக்கர்கள் கட்டியுள்ளதைப் போன்றே தஞ்சை நாயக்கர் களும் கட்டி உள்ளனர். இதையும் தமிழ்நாடு அரசுத் தொல் பொருள் ஆய்வுத்துறை பாதுகாத்து வருகிறது.

## இசை மண்டபம்

கலைக் கூடத்திற்கு எதிரில் உள்ள கட்டடப் பகுதியே 'சங்கீத மகால்'. சேவப்ப நாயக்கனால் எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இது நாயக்கர் காலக் கட்டடக்கலைக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகிறது. நீண்ட சதுர அமைப் பில் அமைந்துள்ளது. இங்குப் பல்வகை இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதன் காரணமாக இந்த மாளிகை சங்கீத மகால் என்று அழைக்கப் பெற்றது. இதுதவிர இங்கே நாட்டிய நாடக நிகழ்ச்சிகளும் நடை பெற்றுள்ளன. எனவே இதை நாடக சாலை என்றும் வழங்குவர். மண்டபத் தின் முன் பகுதியில் மக்கள் அமர்ந்து நிகழ்ச்சிகளைப் பார்ப் பதற்கு ஏற்ற வகையில் அமைக்கப்பட்டிருந்தது. உள் பகுதி யில் மேடை அமைந்துள்ளது. மேடையை ஒட்டி தொட்டி ஒன்று உள்ளது. இதில் நீர் நிரப்பப் பட்டிருக்குமாம். நிகழ்ச்சி நடைபெறும் பொழுது மண்டபத்தில் எதிரொலி கேட்காமல் நிகழ்ச்சிகளைக்கேட்டு மகிழ்வதற்கு ஏற்ற வகையில் அமைக்கப்பட்டிருந்தது. இந்த மண்டபத்தின் மேற் பகுதியில் இருந்து நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கு ஏற்ற வகையிலும் அமைந்திருக்கிறது.

### சரசுவதி மகால் நூல் நிலையம்

நாயக்கர் தர்பார் மண்டபத்தின் எதிரில் உள்ள பகுதியே சரசுவதி மகால் நூல்நிலையமாகும். நாயக்கர் தர்பார் மண்டபத்தின் ஒரு பகுதியே இது. சரசுவதி மகால் நூல்நிலையம் உலகப் புகழ் பெற்றது. உலக அதிசயங்களில் இதுவும் ஒன்று. உலகத்திலேயே அதிகமான ஓலைச்சுவடிகளைக் கொண்ட நூல் நிலையம் இதுவே. இங்கு சோழர்கால இலக்கியங்களும் உள்ளன. நாயக்க, மராட்டிய மன்னர்கள் இந்த நூலகத்தை விரிவு படுத்தி உள்ளனர். இரகுநாத நாயக்கனின் ஆட்சிக் காலத்தில் தமிழ், தெலுங்கு வடமொழிச் சுவடிகளும், நூல்களும் இடம் பெற்றன. கிரந்த, வடமொழி, நாகரி, கன்னட எழுத்துச் சுவடிகளும் இருந்தன. மராட்டிய மன்னர்களில், இரண்டாம் சரபோசியின் ஆட்சிக்காலத்தில் இந்த நூல்நிலையம் சிறந்து விளங்கியது. சரபோசி பல்வேறு மொழிகளில் தேர்ச்சிபெற்று விளங்கினார். இவரால் சேகரிக்கப்பட்ட ஆங்கிலம், இலத்தீன், கிரேக்க, பிரஞ்சு, இத்தாலி ஆகிய மொழி நூல்கள் இந்த நூல் நிலையத்தில் வைக்கப்பெற்றுள்ளன. ஐரோப்பிய மொழிகளில் அகராதியும், இலக்கண நூல்களும் இடம் பெற்றன. இத்துடன் பல்வகைப் புகைப்படங்களும் சேகரிக்கப் பெற்று இங்கு வைக்கப்பட்டுள்ளன. தத்துவம், இலக்கியம், இசை, மருத்துவம், அறிவியல், தாவர இயல் சம்பந்தமான மராட்டிய சுவடிகளும் உள்ளன. சரபோசியால் எழுதப்பெற்ற மராட்டிய நாடகங்களும் உள்ளன. தேவேந்திர குறவஞ்சி என்ற புவி இயல் நூலும், காகிதச்சுவடிகளும், மராட்டிய மொழியில் மகாபாரதம், பாகவதம் ஆகிய நூல்களும் இடம் பெற்றன. தெலுங்குப் பகுதியில் இரகுநாத நாயக்க அப்யுதயமு, கட்டவரதராசு இராமாயணமும் இடம் பெறுகின்றன.

## தமிழ்ச் சுவடிகள்

உரையுடன் கூடிய திருச்சிற்றம்பலக்கோவை, திருவாய் மொழி, நாலடியார்ஆகிய நூல்களும், பெருந்தேவனாரின் பாரதம், சரபேந்திர வைத்திய முறைகள் பற்றிய நூல்களும், ஆயுர்வேதம், யுனானி, அலோபதி, சித்த மருத்துவச் சுவடிகளும் புற்று நோய், சயரோகம், சர்க்கரை நோய், வயிற்று நோய் முதலிய நோய்களுக்கான தமிழ் மருத்துவச் சுவடிகளும் இடம் பெற்றுள்ளன.

## மராட்டியர் தர்பார் மண்டபம்

சரசுவதி மகால் நூல் நிலையத்தின் கிழக்குப் பக்கத்தில் தென்பக்கம் செல்லும் நுழைவாயில் வழியாக உள்ளே சென்றால் திறந்த வெளி முற்றத்தை அடையலாம். முற்றத்தின் கிழக்குப் பக்கத்தில் மராட்டியர் தர்பார் மண்டபம் உள்ளது. இது சகாசி என்ற மராட்டிய மன்னரால் கட்டப்பெற்றதாகும். மண்டபத்தின் முன்பகுதியில் மரத்தூண்களுடன் கூடிய தாழ் வாரம் உள்ளது. இந்த தூண்கள் இலுப்பை, பர்மா தேக்கினால் செய்யப்பெற்றது. முன்பகுதியிலிருந்து மண்டபத்தின் உள்ளே செல்வதற்குப் படிகள் அமைக்கப்பெற்றுள்ளன. படிகளின் மேற் பகுதியில் நீண்ட சதுரவடிவில் ஒரே கருங்கல் போடப்பெற்றுள் ளது. மண்டபத்தில் உள்ள தூண்கள் எண்பட்டைகளுடன் கூடியவை. தூண்களின் உள்பகுதி கருங்கல்லாலும் இதன் வெளிப்பகுதி செங்கல் சுண்ணாம்பைக் கொண்டும் கட்டப்பட் டுள்ளது. மேலே வண்ணம் பூசப்பட்டுள்ளது. மண்டபத்தின் மத்தியப் பகுதியில் உள்ள விதானப் பகுதி கூடுபோன்று அமைந் துள்ளது. இதனை அடுத்து மண்டபத்தின் உள்பகுதியில் நான்கு மரத்தூண்களுடன் கூடிய தர்பார் இடம் உள்ளது. தூண்களின் மேல்பகுதியில் பதினான்கு பட்டைகளுடன் கூடிய விரித்த குடைபோன்ற பகுதி கண்ணாடி பதிக்கப்பெற்று

அழகிய வேலைப்பாடுகளுடன் காட்சியளிக்கிறது. இங்குதான் மராட்டிய மன்னர்கள் அமர்ந்து ஆட்சி செய்தனர்.

**தஞ்சை அரண்மனை ஓவியங்கள்**

தஞ்சை அரண்மனை ஓவியங்கள், பிற்கால தஞ்சை நாயக்கர் காலத்தையும், தஞ்சை மராட்டியர் காலத்தையும் சார்ந்தவைகளாகும். நாயக்கர் கலைப்பாணியினைப் பின்னர் வந்த தஞ்சை மராட்டியர்கள் பின்பற்றியுள்ளனர் என்பதை இங்குள்ள ஓவியங்கள் வாயிலாக அறியமுடிகிறது.

**மராட்டியர் தர்பார் மண்டப ஓவியங்கள்**

மராட்டியர் தர்பார் மண்டபத்தின் வடக்குப் பக்கச் சுவரில் உள்ள ஓவியங்களின் மீது வெள்ளையடிக்கப் பெற்று இருந்தது. இதனைத் தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறை இரசாயன முறையில் துப்புரவுப் பணியினை மேற்கொண்டு இரண்டு இடங்களில் ஓவியங்களை வெளிக்கொணர்ந்துள்ளது. மேற்பகுதியில் பிற்கால நாயக்கர்கால ஓவியங்கள் உள்ளன. யானையின் மீது, அம்பாரம் கட்டி ஒருவர் அமர்ந்தும் அவருக்கு முன்னும் பின்னும் வீரர்கள் வாள், கொடி, வெண்சாமரம், குடை ஆகியவைகளை ஏந்தி அணி வகுத்துச் செல்லும் காட்சியும் ஓவியமாகத் தீட்டப்பெற்றுள்ளது. யானையின் உருவம் கருமை வண்ணத்திலும், வீரர்களின் ஆடை அணிகலன்கள் பசுமை, வெள்ளை, மஞ்சள் போன்ற வண்ணங்களிலும் அழகாகத் தீட்டப்பெற்றுள்ளது. நீண்டமுகமும், நீண்டகண்களும், மீசை, தாடியுடன் காட்சியளிக்கும் இந்த ஓவியங்கள் பிற்கால நாயக்கர் கலைப்பணிக்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

**மராட்டியர் காலம்**

இதன் கீழ் பகுதியில் மராட்டியர் கால ஓவியங்கள் உள்ளன. மராட்டிய மன்னர்கள் திருச்சியை அடுத்த பெரம்பலூர்

காட்டிற்கு வேட்டைக்குச் சென்ற காட்சி ஓவியமாகத் தீட்டப் பெற்றுள்ளது. வேட்டையாடி வீழ்த்திய புலியை ஒரு வண்டியில் கொண்டுவரும் காட்சியும், அதைக் கண்டு மிரண்டு ஓடும் மான்கூட்டங்களின் அழகும், காட்டு மரங்களும் செடி, கொடிகளும் கண்ணைக்கவருகின்றன. இளஞ் சிகப்பு மஞ்சள்வண்ணம் மிகுதியாக இந்த ஓவியங்களில் பயன் படுத்தப்பட்டுள்ளது.

இரண்டு பகுதிகளில் தீட்டப்பெற்றுள்ள ஓவியங்களுக்கு மேல், பள்ளிகொண்ட பெருமாளும், அதன் கீழ் மலர் ஏந்திய ஸ்ரீதேவி, பூதேவி உருவங்களின் இடையே சீனிவாசப் பெருமாளும் அழகுறத் தீட்டப் பெற்றுள்ளனர். பள்ளி கொண்ட பெருமாளின் இடது புறத்தில் காலிங்க நர்த்தனர் உருவம் உள்ளது.

## கிழக்குப் பக்கச் சுவர் ஓவியங்கள்

கிழக்குப்பக்கச் சுவரின் வடபகுதியில் முருகப்பெருமான் வள்ளி, தெய்வயானையுடன், மயிலின் மீது காட்சியளிக்கின்றார். இதன் பக்கங்களில் துவாரபாலகர் உருவங்கள் காட்சியளிக்கின்றன. இந்த உருவங்களைப் பல்வகை அணிகலன்கள் அழகூட்டுகின்றன. உடற்பகுதி வெண்ணிறத்திலும், ஆடைகள் பசுமை வண்ணத்திலும் தீட்டப் பெற்றுள்ளது. பண்டரிபுர பாண்டு ரங்கனின் திருவுருவம், முருகனுக்கு அடுத்து இடது பக்கம் தீட்டப்பெற்றுள்ளது. தன் இரண்டு கைகளையும் இடுப்பில் வைத்தாற்போல் உள்ள இவ்வுருவம் தலையில் தலைப்பாகையுடன் அழகே உருவமாகக் காட்சியளிக்கிறது. இருபக்கங்களிலும் தேவியர் உருவங்கள் தீட்டப்பெற்றுள்ளன. பாண்டுரங்கனின் உடற்பகுதி மஞ்சள் நிறத்தில் உள்ளது. இதன் அருகில் துவார பாலகர் உருவங்கள் வண்ண ஓவியங்களாகக் காட்சியளிக்கின்றன.

## தர்பார் ஓவியங்கள்

மராட்டிய தர்பார் மண்டபத்தின் மத்தியப் பகுதியில் மிகவும் கம்பீரமாக ஊஞ்சல் ஆசனத்திலமர்ந்து, நீண்ட ஆடை (ஷெர்வாணி) அணிந்து, அதன்மேல் அங்கவஸ்திரம், கழுத்தில் மிகுந்த அணிகலன்களும், தடித்த முறுக்கேறிய மீசையும், குறுதாடியும், இடது கையில் தொங்கவிட்ட நீண்ட வாளும், வலது கையில் செங்கோலும் ஏந்தி, காதுகளில் பச்சை சிகப்பு நிறக் கடுக்கன்கள் அணிந்து, நெற்றியில் சிகப்புநிற பொட்டும், தலையில் மராட்டியர் கலைப்பாணியினை வெளிப்படுத்தும் வகையில் வேலைப்பாடு மிகுந்த தலைப்பாகையினை அணிந்து காண்போரின் கண்களையும், கருத்தையும் கவரும் வண்ணம், தர்பார் மண்டபத்திற்குத் தனி அழகினையும், மராட்டியர் ஓவியக்கலைக்குப் பெருமை சேர்க்கின்ற வகையிலும் தஞ்சை மராட்டிய மன்னர் சிவாசியின் உருவம் ஓர் உயிரோவியமாகக் காட்சியளிக்கிறது.

இவ்வோவியத்தின் வலது பக்கத்தில் அமைச்சரும் இடது புறத்தில் தளவாயும் நின்ற நிலையில் தீட்டப்பட்டுள்ளனர். அமைச்சரின் வலது கையில் உத்திராட்சமாலை ஏந்தி இரு கைகளையும் கட்டிக் கொண்டு கழுத்தில் பவழ மாலையும் மார்பில் பதக்கமும் அணிந்து வெண்ணிறத் தலைப்பாகையுடன், விளங்குகிறார். நரைத்த மீசையோடு முதிர்ந்த வயதினராய் புள்ளியிட்ட நீண்ட சட்டை அணிந்து இடுப்பிற்குக் கீழே மடித்துக் கட்டப்பெற்ற வேட்டியுடன் காட்சியளிக்கின்றார். இடது புறத்தில் உள்ள தலைப்பாகையுடன் உள்ள உருவமும் அதே பாணியில் தீட்டப் பெற்றுள்ளது.

இதன் மேற்பகுதியில் தஞ்சைப் பெருவுடையாரை மாராட்டிய மன்னர்கள் வணங்குவது போன்ற காட்சி மிகவும் அழகாக அமைந்துள்ளது.

கிழக்கு பக்கச் சுவரின் தென்புறத்தில் இராதா ருக்மணி யுடன் வேணு கோபாலர் உருவம் அழகுறத் தீட்டப் பெற்றுள் ளது. இதனருகில் உள்ள மற்ற ஓவியங்கள் பெரும்பாலும் அழிந்துவிட்டன.

தர்பார் மண்டபத்தின் வடக்குப் பக்கம் உள்ள அறையில் தீட்டப்பெற்றுள்ள ஓவியங்களும் மாராட்டியர் காலத்தைத் சார்ந்தவைகளாகும். நடராசர், சிவகாமி உருவங்களும் அவற் றின் கீழ் விநாயகர், தன்னுடைய தேவி சீதையுடன் இராமர் இலக்குவன், அனுமன் ஆகிய உருவங்களும் காணப்படுகின்றன. இதனருகில் சரசுவதி, முருகன் ஆகியோர் உருவம் வேலைப் பாடுகளுடன் அழகாகக் காட்சியளிக்கின்றன.

## இருட்டறை ஓவியங்கள்

மராட்டியர்தர்பார் மண்டபத்தின் வடகிழக்கு மூலையில் இருட்டறைகள் உள்ளன. இவற்றுள் இரண்டு அறைகளில் மராட்டியர் கால ஓவியங்கள் உள்ளன. கைலாயக்காட்சி மிகவும் பெரிய அளவில் தீட்டப் பெற்றுள்ளது. சிவன் பார்வதி, ஆகிய இருவரும் நடுவில் அமர்ந்திருக்க விட்ணு, கிட்கிந்தன் விநாயகர் பதஞ்சலி, வியாக்ரபாதர், முருகன் பிரம்மா, உருவங்களும் அதன் கீழ் மராட்டிய அரசி வணங்குகின்ற காட்சியும் தீட்டப்பெற்றுள்ளது. வீர ஆஞ்சநேயர், கசலட்சுமி, சரசுவதி ஆகிய உருவங்களும் வேணுகோபாலர் கிருட்ண லீலைகளும் வண்ண ஓவியங்களாக மற்றொரு அறையில் காட்சி அளிக் கின்றன.

## சுதை உருவங்கள்

தஞ்சை அரண்மனையில், நாயக்கர் தர்பார் மண்டபம், மராட்டியர் தர்பார் மண்டபம், இருட்டறைகள் ஆகிய இடங்

களில் சுதை உருவங்கள் அழகு செய்கின்றன. நாயக்கர் தர்பார் மண்டபத்தில் இராமர் பட்டாபிசேகக் காட்சிகள் சுதையில் மிகவும் அழகாக வடிக்கப் பெற்றுள்ளன. நுழைவாயிலின் மேல் பகுதியிலும் சுதை உருவங்கள் உள்ளன.

மராட்டியர் தர்பார் மண்டபத்தில் எண் பட்டைத் தூண்கள் நிறைந்த பகுதியைக் காணலாம். முன் பகுதியில் உள்ள தூண்களின் நான்கு பக்கங்களிலும் அன்னத்தின் மீது நான் முகனும், கருடனின் மீது திருமாலும், வெள்ளை யானையின் மீது இந்திரனும், காளையின் மீது சிவபெருமானும் அமர்ந்துள்ள காட்சி மிகவும் அழகாகச் சுதையில் வடிக்கப் பெற்றுள்ளது. மற்ற தூண்களின் மீது நாட்டிய மகள், ஆங்கில சிப்பாய்களின் உருவங்கள், மல்யுத்த வீரர்களின் உருவங்கள், பாம்பாட்டி, கோமாளியின் உருவங்கள் முதலியன சுதையில் செய்யப் பெற்று வண்ணம் பூசப் பெற்றுள்ளன. சுவர்ப் பகுதியில் திருமாலின் பத்து அவதாரங்களும் சுதையில் வடிக்கப் பெற்று வண்ணம் பூசப்பெற்றுள்ளது. இதில் ஒரு சில சிதைந்து விட்டன. மண்டபத்தின் வடக்குப் பக்கத்தில் மீனாட்சி சுந்தரேச்சுவரர் திருக்கல்யாணமும், தென்பக்கச் சுவரில் திருமால் ஆதிசேசன் மீது அமர்ந்த நிலையும் காட்டப்பெற்றுள்ளது. இவை இரண்டும் சிதைந்துள்ளன.

அரண்மனையிலுள்ள இருட்டறைகளில் சுதை உருவங்கள் உள்ளன. இவைகள் குச்சி, இரும்பு ஆகியவைகளுடன் நாரினைக் கொண்டு கட்டப்பெற்று செங்கல், சுண்ணாம்புடன் சேர்த்து செய்யப் பெற்றுள்ளது. ஐந்து முகங்களுடன் கூடிய வீர ஆஞ்சநேயர், சிம்மத்தின் மீது ஐந்து முக விநாயகர் விசுவ உருவராமர், லட்சுமணர், சீதை, கருடன், நடராசர், சிவகாமி, காளி, வாராகி, மகிடாசுரமர்த்தினி, பிரம்மா, பைரவர், சிவ பெருமான், விட்ணு, தட்சிணாமூர்த்தி, உலகளந்த பெருமாள்,

கசலட்சுமி மற்றும் வைகுந்த காட்சியும், இது தவிர தேவிகளின் பல்வகை உருவங்களும் சுதையில் செய்யப்பெற்றுள்ளன.

## தொட்டிகளுடன் உள்ள அறைகள்

இருட்டறைகளுக்குக் கிழக்குப் பக்கத்தில் ஒரு அறையில் பல தொட்டிகள் கட்டப்பெற்றுள்ளன. இத்தொட்டிகள் எதற்காகப் பயன்படுத்தப் பெற்றிருக்க வேண்டும் என்பது தெரியவில்லை. இத்தொட்டிகளில் பொருட்கள் சேமித்து வைக்கப்பெற்றனவா அல்லது நீர் நிரப்பி வைக்கப்பெற்றதா என்பதைத் தெளிவாகக் கூற முடியவில்லை.

## ஆங்கிலேயர் கால ஓவியங்கள்

நாயக்கர் தர்பார் மண்டபத்திலும், மராட்டிய தர்பார் மண்டபத்திலும் இவை தீட்டப்பெற்றுள்ளன. மல்யுத்த வீரர்கள் உருவம் மிகவும் அழகாகத் தீட்டப்பெற்றுள்ளது.

## சுரங்கப்பாதை

மன்னர்களின் பாதுகாப்பினைக் கருதி போர்க் காலங்களில் அல்லது அவசரக் காலங்களில் பாதுகாப்பாகத் தப்பிச் செல்வதற்கும், அல்லது இரகசியமாக ஒரு இடத்திலிருந்து மற்ற இடத்திற்குப் போவதற்கும் பூமிக்கு அடியில் அமைக்கப்பெற்ற வழியே சுரங்கப்பாதை. தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத் துறை இரண்டு இடங்களில் சுரங்கப் பாதை இருப்பதை வெளிப்படுத்தியுள்ளது. ஒன்று மராட்டியர் தர்பார் மண்டபத்திலும், மற்றது தஞ்சை சிறிய இளவரசர் வீட்டிற்கு கீழேயும் செல்லுகிறது. இந்தச் சுரங்கப்பாதை சுமார் 8.5 அடி உயரமும் 2.6 அடி அகலமும் உள்ளது. சுவர் செங்கல் சுண்ணாம்பைக் கொண்டு கட்டப் பெற்றுள்ளது. உட்பகுதி மண்ணால் பூசப் பெற்றுள்ளது. சுரங்கப் பாதையின் மேற் பகுதியில் காற்று

செல்வதற்குத் துவாரங்கள் வைக்கப் பெற்றுள்ளன. சுரங்கத்திற்குள் செல்வதற்கும் வெளியேறுவதற்கும் படிகள் அமைக்கப் பெற்றுள்ளன.

## ஏழடுக்கு மாளிகை

இரண்டாம் சரபோசி காசிக்குச் சென்று வந்ததிற்கு அடையாளமாக ஏழடுக்கு மாளிகையினைக் கட்டியுள்ளார். தஞ்சை அரண்மனையில் உள்ள கட்டடப் பகுதியில் இதுவே மிகவும் உயரமானது; ஏழு அடுக்குகளை உடையது. இந்த மாளிகையில் இருந்து கீழே இறங்காமல் அரண்மனையின் மீதே சென்று தஞ்சையின் நான்கு பக்கங்களையும் பார்வையிடும் அளவிற்கு அமைக்கப்பெற்று இருந்ததாம். பின்னர் ஒரு சில பகுதிகள் இடிந்து விட்டதால் இப்பொழுது ஒரு பகுதியில் இருந்து மற்ற இடத்திற்குச் செல்ல முடியாது.

## அரண்மனைக் கோயில்கள்

அரண்மனையில் பல கோயில்கள் எடுக்கப் பெற்றுள்ளன. இவற்றுள் காளி கோயிலும், ஆஞ்சநேயர் கோயிலும் சிறப்புடையவை. காளி கோயிலில் சலவைக் கல்லால் செய்யப் பெற்ற தெய்வ உருவங்கள் வழிபாட்டில் உள்ளன. இது ஆஞ்சநேயர் கோயிலுக்குப் பக்கத்தில் உள்ளது. ஆஞ்சநேயர் கோயில் இரண்டாவது நுழைவாயிலில் உள்ளது. தஞ்சை வாழ் மக்கள் ஆஞ்சநேயரை விரும்பி வணங்குகின்றனர். மற்றொரு ஆஞ்சநேயர் சிற்பம் சரசுவதி மகால் நூலக நுழை வாயிலின் மேற்குப் பக்கம் உள்ளது. இதன் அருகில் விநாயகர் சிற்பமும் உள்ளது. இது தவிர முதிய இளவரசர் வீட்டிற்குச் செல்கின்ற வழியில் பெரிய அளவில் ஆஞ்சநேயரின் உருவம் ஓவியமாகத் தீட்டப் பெற்றுள்ளது. இங்கு தேவியர் உருவங்களும் உள்ளன.

## பிற கட்டடப் பகுதிகள்

இளவரசர்கள் தற்பொழுது வாழ்ந்து வருகின்ற பகுதிகளும், இவர்களுடைய பணியாளர்கள் வாழ்கின்ற பகுதிகளும் உள்ளன. இப்பகுதிகளில் மராட்டியர் கால கலைப் பயிற்சியினைக் காண முடிகிறது. பெரிய தூண்களின் மீது, உத்திரம் போட்டு அதன் மீது கட்டடப்பகுதி அமைந்துள்ளது. இதில் சுதை உருவங்கள் அழகு செய்கின்றன. இவை தவிர தஞ்சை மராட்டியர் கால ஓவியங்கள் இளவரசர்களின் வீட்டை அலங்கரிக்கின்றன.

## சத்திரங்கள்

தஞ்சை வரலாற்றில் சத்திரங்களின் பங்கு போற்றுதற்குரிய ஒன்றாகும். சத்திரங்களில் வணிகப் பெருங்குடி மக்களும், யாத்திரிகர்களும் தங்கிச் சென்று உள்ளனர். இந்தியாவின் அனைத்துப் பகுதியிலிருந்தும் யாத்திரிகர்கள் தமிழ் நாட்டிற்கு வந்து தங்குவதற்கும், இவர்களுக்கு வேண்டிய உணவு, மருத்துவம், பாதுகாப்பு போன்ற தேவையான அனைத்துப் வசதிகளையும் சத்திரங்கள் செய்து கொடுத்துள்ளன.

## சத்திரங்கள் அமைந்த இடம்

தஞ்சை மாவட்டம், மாயவரத்தை அடுத்த மல்லியத்திலிருந்து தொடங்கி பட்டுக்கோட்டை வழியாகத் திரு இராமேச்வரம் சேதுக்கரை வரை பெருவழி அமைந்திருந்தது. இவ்வழி முற்காலத்தில் 'ராமேச்வரம் ரஸ்தா' என்று அழைக்கப் பெற்றுள்ளது. இந்த வழியில் பல சத்திரங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

## சத்திரங்களின் வரலாறு

கி.பி. 1873-ஆம் ஆண்டு வருவாய்த்துறை அறிக்கையின்படி 694 சத்திரங்கள் இருந்ததாகத் தெரிய வருகிறது. இவற்றுள் 16 சத்திரங்கள் மராட்டிய மன்னர்களாலும், 17 சத்திரங்கள் ஆங்கில ஆட்சியினராலும் அமைக்கப் பெற்றவைகளாகும். 209 சத்திரங்கள் வழிப்போக்கர்கள் தங்குவதற்கு ஏற்ற வகையில் அமைக்கப்பட்டிருந்தது. 49 சத்திரங்கள் கவனிப்பாரற்றுக் கிடந்துள்ளன. இவைகளில் பெரும்பான்மையான சத்திரங்கள் அழிந்துவிட்டன. மிகவும் குறைந்த எண்ணிக்கையுடைய சத்திரங்களே உள்ளன.

மராட்டிய மன்னர்களது தாய், மனைவி, பட்டத்தரசி, சகோதரி, ஆசை நாயகியர் ஆகியோர் பெயர்களைக்கொண்டு இன்றும் விளங்குகின்றன. ஒரு சில சத்திரங்கள் அவர்களின் குலதெய்வத்தின் பெயரால் அமைக்கப்பெற்றுள்ளன.

தஞ்சை மராட்டிய மன்னர்களான பிரதாபசிங், துளசாசி, இரண்டாம் சரபோசி ஆகிய மன்னர்கள் காலத்தில் 18க்கு மேற்பட்ட சத்திரங்கள் கட்டப்பெற்றுள்ளன. 60க்கு மேற்பட்ட ஊர்களில் சத்திரங்கள் சிறப்பாக நடக்க 40 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் விடப்பட்டிருந்தன.

## சத்திரங்களின் பங்கு

**கல்விச் சாலை:** ஒவ்வொரு சத்திரத்திலும் ஒரு பள்ளிக் கூடம் இருந்திருக்கிறது. பள்ளி மாணவர்களுக்கு வேண்டிய உணவு அளிக்கப்பட்டதுடன், இலவசமாகப் புத்தகங்களும் வழங்கப் பெற்றுள்ளன. சமஸ்கிருதம் எல்லாப் பள்ளியிலும் பயிற்றுவிக்கப்பட்டது.

மருத்துவச் சாலை; ஒவ்வொரு சத்திரத்திலும் ஒரு மருத்துச் சாலை அமைந்திருந்தது. நோயாளிகள் தங்கிச் சிகிச்சை பெறுவதற்கு ஏற்ப வசதிகள் செய்யப் பெற்று இருந்தது. சத்திரத்திற்கு வருகின்ற பயணிகளில் குறிப்பாகக் கருவுற்ற பெண்கள் இங்கு தங்கி இருக்கும் காலங்களில் மகப்பேறு ஏற்பட்டால் தாய்க்கும், சேய்க்கும் வேண்டிய அனைத்து வசதி களையும் சத்திர நிர்வாகமே கவனித்துக் கொண்டது.

## மாணவர்களுக்கு உணவு வழங்கும் திட்டம்

பல்வேறு இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் சத்திரங்களில் அமைந்திருந்த விடுதிகளில் தங்கி இருந்தனர். ஆதிதிராவிடர், கள்ளர், வெள்ளாளர், நாவிதர், முகமதியர்கள், வன்னியர்கள், பிராமணர் ஆகிய அனைத்து இனத்தவரும் ஒன்றாகவே தங்கி இருந்திருக்கின்றனர் என்பது போற்றுதற்குரிய ஒன்றாகும். மாணவர்களுக்குத் தனியாக உணவு வழங்கும் திட்டம் இருந்திருக்கிறது. சத்திரத்தின் அளவிற்கு ஏற்ப தினமும் இரண்டு வேளை உணவு வழங்கப்பட்டுள்ளது.

## முதியோர்களுக்கு உணவு வழங்கும் திட்டம்

தஞ்சை மராட்டியர்கள் ஆட்சிக் காலத்தில் சத்திரங்கள் மூலமாக நடமாட முடியாத முதியோர்களுக்கு வீதி தோறும் உணவு எடுத்துச் சென்று வழங்கப் பெற்றுள்ளது. இது தவிர பிச்சைக்காரர்களுக்கும் காலையும், மாலையும் உணவு வழங்கப் பெற்றுள்ளது.

★